2023 ஏப்ரல் 5]

கோபிசெட்டிபாளையத்திலே மாதக் கணக்கிலே தங்கி சில திரைப்படங்களையெல்லாம் தயாரித்திருக்கின்ற காரணத்தால், எனக்கு மிகவும் பரிச்சயமான ஊர்தான் கோபிசெட்டிபாளையம். ஏற்கெனவே, சென்ற அரசாங்கம் அதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்தது. அந்தப் புறவழிச் சாலை எப்போது அமைக்கப்படும் என்று கேட்கிறார்கள். அது கட்டாயம் வருவதிலே எனக்கு ஒன்றும் மாற்றுக்கருத்து இல்லை. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அரசினுடைய நிதிநிலைமை உங்களுக்கெல்லாம் தெரியும். ஏற்கெனவே 6 இலட்ம் கோடிக்குமேல் கடன் இருக்கிறது. வட்டி கட்ட வேண்டிய நிலை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே 234 தொகுதிகளிலும் தேவையிருக்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சாலை போட வேண்டும் என்ற ஓர் அவா, ஆதங்கம் அல்லது போட வேண்டும் என்ற கடப்பாடு உங்களுக்கெல்லாம் இருப்பதை நான் அறிவேன். ஆனாலுங்கூட, ஈரோடை பொறுத்தளவுக்கு, கோபிசெட்டிபாளையத்திற்கு முன்னுரிமை அளித்து இந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு

***8408—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, கீழப்பாவூர் கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கீழப்பாவூர் கிராமம், புல எண் 1930/17–ல் 00140 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டு நாளது வரையில் நல்ல நிலையில் உள்ளது. ஆகவே, மேற்படி வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் புதியதாகக் கட்டுவதற்கு தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியிலுள்ள சிவலாளர் குளம் வருவாய் கிராமம், ஒரு பெரிய கிராமமாகும். அதில் உள்ளடங்கியதுதான் நல்லூர் என்ற ஊர். அந்த நல்லூரை சிவலாளர் குளம் வருவாய் கிராமத்திலிருந்து பிரித்து தனி வருவாய் கிராமமாக அமைப்பதற்கும், அதேநேரத்தில், ஆலங்குளம் வருவாய் கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு ஒன்றைக் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், நல்லூர் கிராமத்தை வருவாய் கிராமமாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் பத்து அம்சக் கோரிக்கைகளில் கொடுத்திருக்கிறேன் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லூர் கிராமத்தைப் பிரித்துத் தனி வருவாய் கிராமமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மட்டுமல்ல எல்லா உறுப்பினர்களும் கேட்கிறார்கள்; நான் உட்பட கோரிக்கை வைக்கின்றோம். Revenue Villages—வருவாய் கிராமங்கள் அனைத்தும் பெரிது பெரிதாக இருக்கின்றன. அந்தக் காலத்தில் கிராம அலுவலர்களை

2023 ஏப்ரல் 5]

நியமிக்கும்போது மக்கள்தொகைக் குறைவாக இருந்தது; இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. ஆகையினால் அவற்றைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துகொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலுள்ள கடையம் ஒன்றியம், அதிகமான வருவாய் கிராமங்களைக் கொண்ட ஒன்றியம். அங்கே அடைச்சாரி என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கிட்டத்தட்ட 40 கி.மீ. தொலைவிலுள்ள தென்காசி தாலுகாவிற்குச் செல்லக்கூடிய சூழ்நிலையைத் தாங்களும் அறிவீர்கள். கடையம் தாலுகாவைத் தனித் தாலுகாவாக அமைக்க வேண்டும் என்பது கடையம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையம் தாலுகாவைத் தனி தாலுகாவாக இந்த ஆண்டு அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதிகளிலே தாலுகாவைப் பிரித்து புதிய தாலுகாவை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பணிகளெல்லாம் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதர பிற்படுத்தப்பட்டோர் 27 சதவிகித இடஒதுக்கீடு

சாதிச் சான்றிதழ் தொடர்பாக கேள்வியைக் கேட்கிறேன். ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்களின் வகைப்பாடுகளில், சாதிச் சான்றிதழ்களில் தனித் தனியாக வகைப்படுத்தி உள்ளார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் உத்தரவுகளில் 4(2)(3) பிரிவில் பொதுவாக பொதுத்துறை ஊழியர்கள் என்று குறிப்பிட்டிருப்பதால், பொதுத் துறை நிறுவனங்களில் வேலை செய்யும் இடைநிலை, கடைநிலை ஊழியர்களுக்கு உரித்தான சாதிச் சான்றிதழ் கிடைக்காமல் சிக்கல் உள்ளது. பொதுத் துறை ஊழியர்கள் என்ற இப்பிரிவினை வகைப்படுத்தி, கடைநிலை ஊழியர்கள், இடைநிலை ஊழியர்கள் என்று பிரித்தால்தான், 27 சதவிகிதம் இடஒதுக்கீடு அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும். இதனால் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவாய்த் துறையில் இதர பிற்படுத்தப்பட்டோர், பொதுத் துறை நிறுவனங்களில் இடைநிலை ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் என்று பிரித்தால், அவர்களுடைய குழந்தைகள் ஒன்றிய அரசின் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் சேர வாய்ப்பு ஏற்படும். இதர பிற்படுத்தப்பட்டோர் 27 சதவிகித இடஒதுக்கீடு சான்றிதழ் கிடைக்க வழி செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுசம்பந்தமாக ஏற்கெனவே என்னிடம் பேசியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக என்னுடைய துறை அதிகாரிகள் மத்தியிலும் நான் கலந்து பேசியிருக்கிறேன். என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கை முடிந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு வேண்டிய முடிவெடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் காரைக்குடி

2023 ஏப்ரல் 5]

நகர்ப் பகுதியில், அண்ணா நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இணைந்துதான் அந்தப் பட்டாக்களை வழங்கினார்கள். அந்தப் பட்டா வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் பட்டா வழங்க வேண்டுமென்றும், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட செக்காலக்கோட்டை, கழனிவாசல் பகுதிகளிலெல்லாம் பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன; ஆனால், பட்டா மாறுதல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் ஏற்கெனவே தகவல் தெரிவித்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. சா. மாங்குடி: *ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டாக்கள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். அதுகுறித்து அரசினுடைய அடங்கலில் ஏற்றாமலும் இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து பட்டா வழங்குவதற்கும், இடங்கள் எங்கே இருக்கின்றன; அவர்கள் எத்தனை ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள் என்பதையெல்லாம் அரசினுடைய பரிசீலனையில் எடுத்து, அதற்கு வேண்டிய தொடர் நடவடிக்கைகளை எடுப்போம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் சுமார் 500 குடும்பங்கள் நிரந்தரமாக வீடுகள் கட்டி சுமார் 60 ஆண்டுக் காலமாக வசித்து வருகின்றனர். அவர்களுக்கு இதுவரை பட்டாக்கள் கிடைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் 500 குடும்பங்களுக்குப் பட்டா கேட்கிறார்கள். அவ்வளவுதான். அது என்னவென்ற விவரங்களைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: அந்த இடம் முழுவதும் belt area–ல் வருகிற காரணத்தினால், அங்கே பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அதைத் தவிர, அவர்கள் குடியிருக்கிற பகுதி எந்த category–ல், எந்தப் பிரிவில் இருக்கிறது என்பதையெல்லாம் சரிபார்த்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்தைப் பொறுத்தவரையில், 8 கிலோ மீட்டர் surrounding–க்கு பட்டா கொடுக்கக் கூடாது என்று ஏதோ ஓர் அரசு விதி இருக்கிறதாம். எங்களுக்கு மட்டுமல்ல; மாநகராட்சிப் பகுதிகளில் எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்சினை இருப்பதாகச் சொல்கின்றனர். கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற குடும்பங்கள், அங்கே வீடுகள் கட்டி, குடும்பத்தோடு வசித்து வருகின்றனர். அவர்களிடம் Ration card, EB card, Aadhar card போன்றவையெல்லாம் இருக்கின்றன. அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டிலே, சென்னை

2023 ஏப்ரல் 5]

உள்ளிட்ட பல மாநகராட்சிப் பகுதிகளெல்லாம் belt area *என்று சொல்லி பட்டா வழங்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.* Court*–னுடைய உத்தரவும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, அதுசம்பந்தமாக ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த நம்முடைய அன்புத் தலைவர் ஐயா கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கிராம நத்தம் மனைகளுக்கெல்லாம் பட்டா கொடுத்தோம். அன்றைக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றனர். இன்றைக்கு சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் அளவிற்கு* belt area *என்று சொல்கின்றனர்.* Belt area *என்று சொல்லக்கூடிய இடங்களுக்குப் பட்டா கிடையாது என்று தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அன்பிற்கினிய அண்ணன் தளபதி அவர்கள் இன்றைக்கு எண்ணற்ற திட்டங்களை, மக்கள் நலப் பணிகளைச் செய்து வருகிறார்கள். உதாரணத்திற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு என்ன கேள்வி?* (குறுக்கீடு) *யாருக்கு, என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேளுங்கள்.*

திரு. க. கணபதி: *ஒரேயொரு கேள்விதான், சொல்லிவிடுகிறேன். ஒரேயொரு விஷயம். மிகவும் முக்கியமான விஷயம். அதனால், பேசிவிடுகிறேன். உதாரணத்திற்கு ரூ.1,000 மகளிர் உரிமை தொகை என இப்படி எண்ணற்ற திட்டங்களை அறிவிக்கின்ற நம்முடைய கழக அரசு, இன்றைக்கு ஏழை மக்கள் பயன்பெறுகிற விதத்தில், இந்த* belt area *என்று சொல்லக்கூடிய அந்தச் சட்டத்தையே எடுத்துவிடலாமே என்று நான் சொல்கிறேன். என்ன காரணம் என்று சொன்னால், . . .*

[2023 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேளுங்கள்.

திரு. க. கணபதி: நாங்களெல்லாம் சுற்றியிருக்கிறோம். சென்னையைச் சுற்றியிருக்கிற இடங்களெல்லாம் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள். தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இலவசப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. ஆகவே, இதைக் காரணம் சொல்லி, இன்றைக்குப் பட்டா வழங்க மறுக்கப்படுகிறது. இதற்கு எப்படியாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனித் தீர்வு கண்டு, அனைத்து மக்களும் பயன்பெறும் விதத்திலே பட்டா வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவருக்கு சொன்ன பதில்தான் இவருக்கும் சொல்ல வருகிறேன். Belt area குறித்து 1962 ஆம் ஆண்டே சட்டம் இயற்றப்பட்டு இருக்கின்றது. நம்முடைய சென்னை மாநகராட்சியைச் சுற்றியிருக்கின்ற பகுதிகள், சென்னையைச் சுற்றி 4 மாவட்டங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்துகிறது. ஆனால், 1962—ல் பல காரணங்களை வைத்து இதைச் செய்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து கொண்டு, இதை நாம் செய்தால் சாதக, பாதகங்கள் என்ன வரும், Belt area—வில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கினால், எப்படி வழங்குவது, எத்தனை வருடங்களாக இருப்பவர்களுக்கு வழங்குவது, இப்பொழுதுகூட, 30 வருடங்கள், 40 வருடங்கள் ஆக்கிரமித்து இருப்பவர்களும் இருக்கிறார்கள். கடந்த 4 வருடங்கள், 5 வருடங்களாக ஆக்கிரமித்து குடியிருப்பவர்களும் இருக்கின்றார்கள். இதையெல்லாம் அரசு கவனத்தில் வைத்து பரிசீலித்து கொஞ்சம் நிதானமாகத்தான் முடிவு எடுக்க வேண்டும். இதை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், அந்த நான்கு மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் என் கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள். நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசி இதற்கு வேண்டிய முடிவு எடுக்கலாம். ஆனால், சாதக, பாதகங்களைப் பொறுத்துத்தான் முடிவு எடுக்க முடியும்.

2023 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானத் தருணத்திலே, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியதற்கு நன்றி. உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிகளிலே மக்களிடம் ஒரு சின்ன பதற்றம் நிலவுகிறது. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியையும், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியையும், பழனியோடு இணைத்து பழனி மாவட்டமாக உருவாக்கப் போவதாக செய்தித்தாள்களிலும், சமூக வலைதளங்களிலும் செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. என்னுடைய முகாம் அலுவலகத்திலே, கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான மக்கள் வந்து இதுபற்றி நேற்றிலிருந்து என்னிடம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பழனி மாவட்டமாகப் பிரிப்பது மிகவும் முக்கியமானது. பழனி முக்கியமான ஸ்தலம். அதைத் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியிலே இணைத்து பழனி மாவட்டத்தை உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உருவாக்குவீர்களா என்று கேட்கிறீர்கள்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம். அதனால்தான் உங்களுக்கு நன்றி சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது மாவட்டத்தை உடனே பிரிக்கப்போவது இல்லை.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் மடத்துக்குளம், உடுமலைப்பேட்டையை பழனியோடு இணைக்காமல்,—உடுமலைப்பேட்டை குமணன் வாழ்ந்த மிக முக்கியமான புகழ்பெற்ற தலைநகரம். அதைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தலைநகரை உருவாக்க அரசு முன்வருமா அல்லது ஏற்கெனவே, பொள்ளாச்சியை மாவட்டமாக உருவாக்க அரசு முன்வருவதாகத் தகவல் வந்துள்ளது. இல்லையென்றால் பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு. . .

[2023 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஹேஷ்யத்திற்கெல்லாம் வேண்டாம். உங்களுக்கு அது உருவாக்கப்படுமா என்று கேட்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். நேரம் இல்லை.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலையை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா அல்லது பொள்ளாச்சியை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கே மாவட்டத்தைப் பிரிக்கிறோம் என்று சொன்னோம். சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் இதுபோல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அரசினுடைய கவனத்தில் இருக்கிறது என்றுதான் சொன்னோம்; பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. அவரவர்கள் அவரவர்களுடைய சௌகரியத்திற்கு பத்திரிகையிலோ, YouTube—லோ பிரிப்போம் என தெரிவிக்கின்றனர். அப்படி நடக்காது. அப்படிப் பிரிக்க வேண்டிய காலம் வருகின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையெல்லாம் கேட்காமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுக்க மாட்டார்கள். அப்படிப் பிரிக்க நேரும் காலங்களில் நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அந்தக் கோரிக்கையை வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

105—

சிறப்பு நீதிமன்றம்

***152—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?